1158

பதிவு எண்—M 5120 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் இளவழகனார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - SEP 1955
MADRAS

1158
577

கிளை—7 தருதலம், ஸ்ரீரம்பாக்கம்; மன்மத ஆவணி ௩ 19—8—55 தளிர்—46

குருகுலத்தின் குறிக்கோள்

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

வித்தும் விளைவும்

வித்து விளைவு என்றாலும், காரணம் காரியம் என்றாலும், இரண்டும் ஒன்றே. விதையின்றி விளைவில்லை: காரணமின்றிக் காரியமில்லை. அப்படியே வித்திலிருந்து விளைவு இல்லாமலுமில்லை; வித்து கட்டாயம் விளைதலையும் காரணம் கட்டாயம் காரியமாதலையும் நாம் காண்கின்றோம்.

இங்கே ஐயம் உண்டாகலாம்; சில நேரங்களில் வித்துக்கள் விளையாமல் கெட்டுப்போதலையும் பார்க்கின்றோம்; அப்படியே சில காரணங்கள் காரியமாகாமலும் அதாவது செயற்படாமலும் நசித்துப் போகலாமே, ஆகவே எதற்கும் எப்படியும் விளைவு உண்டு என்று தீர்மானமாய்ச் சொல்லமுடியுமா? என்பது. அப்படியன்று; விளையும் ஆற்றலுடைய முதற் பொருளுக்குத்தான் ‘வித்து’ என்று பெயர்; அல்லாதது ‘போலி வித்து’; அப்படியே காரியமாகக் கூடிய மூலத்துக்குத்தான் காரணம் என்று பெயர்; அல்லாதது ‘போலிக் காரணம்’ எனப்படும்.

ஆனால், உண்மை வித்து அல்லது உண்மைக் காரணமாயினும் அவற்றை விளையாதபடி காரியமாகாதபடி அவற்றின் ஆற்றலை உலர்த்தி மெலிவடையச் செய்துவிடலாம்; மற்று, யாதோர் எதிரும் இல்லாதபோது, அவை தம் இயல்பில் செயற்பட்டே தீரும் என்பதே உண்மையாவதாம்.

இந்தத் தெளிவு மக்கட்கு இருக்குமானால், வாழ்க்கை செந்நெறியிற் செல்லும்; பற்பல உண்மைகளும் இதனால் விளக்கம் பெறும்.

ஒருவருக்கு ஒரு நல்லது இன்று செய்தால் அது நாளை ஒரு நன்மையாய் விளைந்தே தீரும்; தீயது செய்தால் நாளை ஒரு தீமையாய்க் காரியப்பட்டே தீரும் என்று இந் நெறிமுறையை அறிந்திருப்போர், தமது வாழ்க்கையில் எப்படியும் நன்மைகள் செய்ய விரும்புவரே யல்லது தீமைகள் செய்ய ஒருப்படார்.

மேலும், ‘வித்து’ என்னுங் குறிப்பு, இன்று வித்தாயிருப்பது இன்றே விளைவாகாது, உரிய காலத்தில் பின்னொரு நேரந்தான் விளைவாகும் என்னும் உண்மையும், ஒரு வித்து தனது விளைவில் பல தானியமாய்ப் பெருகியே விளையும் என்னும் உண்மையும் நினைவூட்டுவதனால், நல்லது அல்லது தீயதை இன்று செய்வோர் பின்னொரு காலத்திலேதான் பயனை நுகர்வர் என்பதும், ஒன்று பலவாய் நுகர்வர் என்பதும் அறிவர்; அறிந்து, நாளையே யாயினும் தீயது ஒன்று பலவாய் நுகர்தலை எவரும் விரும்பாராதலின், மறம் விடுத்து அறம் செய்தலிலேயே அவரது வாழ்க்கை திரும்புதல் கூடும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

நன்றிக்கு வித்தாகும்
நல்லொழுகம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நன்றிக்கு வித்தாகும் நல் ஒழுக்கம்— அறத்துக்குக் காரணமாகும் நல்லொழுக்கம்; தீய ஒழுக்கம் என்றும் இடும்பை தரும்—கெட்ட ஒழுக்கம் என்றைக்கும் துன்பம் விளைக்கும்.

நல்லொழுக்கம் நன்றிக்கு வித்து எனவே, தீயொழுக்கம் பாவத்துக்கு வித்து என்பதும், தீயொழுக்கம் இடும்பை தரும் எனவே நல்லொழுக்கம் இன்பந் தரும் என்பதும் தாமே பெறப்படுகின்றன.

ஒன்றை ஒரு வகையாகவும் மற்றொன்றை மற்றொரு வகையாகவும் கூறுவதிலிருந்தே அவற்றின் மறு வகைகளை ஆசிரியர் எளிதாகப் புலப்படுத்திவிடுகின்றார். சுருங்க உரைக்கும் இவ் வல்லமைப்பாடு திருவள்ளுவர்க்கு மிக இனிதாக அமைந்திருக்கின்றது.

நன்றி என்றது நன்மையை; அதாவது அறத்தை. ‘என்றும்’ என்ற குறிப்பு இப் பிறப்பில்மட்டு மன்றி மறுபிறப்பிலும் என்றற்கு. ‘என்றும்’ என்பதை நல்லொழுக்கம் தீயொழுக்கம் இரண்டிற்குங் கூட்டிக்கொள்க. முறையே இன்பமும் துன்பமும் இருமையிலும் இவை தரும் என்றபடி.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளிநாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

ஆயுள்—
கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	மன்மத, ஆவணி,	தளிர்
7	19-8-55 வெள்ளி.	46

முல்லைக் கொடி

நமது கிழமை இதழ் முல்லைக் கொடிக்கு, வருகின்ற கலைமகள் விழாவிலிருந்து எட்டாவது ஆண்டு தொடங்குகின்றது.

எளிய நடையில் தமிழ் நாட்டுக்கும் உலகுக்கும் ஆக்கமான கொள்கைகளை மேற்கொண்டு முல்லைக் கொடி இயன்ற அளவு தொண்டு செய்துவருகின்றது.

மக்கள் ஒவ்வொருவரும் அவரவர் தாய்மொழிப் பயிற்சியைக் கட்டாயம் பெற்றிருக்கவேண்டும். பொதுக் கல்வியாகிய மொழியறிவு முதலியன பெற்றிருத்தலோடு தத்தமக்கு விருப்பமான ஒரு தனிக் கல்வியறிவையேனும் அடைந்திருக்கவேண்டும். பொதுக் கல்வி தனிக் கல்விகளோடு ஏதேனும் ஒரு தொழிற் பழக்கமாவது உடையவராய் விளங்கவேண்டும்; இம் மூன்றுடன் ஒரு சமய சாத்திரப் பயிற்சி மிகுந்து அருள் நிலைப்பில் இருக்கவேண்டும். இந் நான்கின் அடிப்படைத் திறத்தால் தமது பிறப்பில் உலகுக்கு ஏதாவது ஒரு நற்பணி எடுத்து விடா முயற்சியுடன் செய்துவரவேண்டும்.

இப்படி ஐந்து உறுதியான கொள்கைகளைக் குருகுலம் உடையது; மக்களிடையே இவை நன்கு பரவப் பரவ மக்கள் இவ்வைந்திலும் வளர்ந்து எல்லாவகையான நலங்களையும் அடையவாய்ப்பாய் இருக்கும். இவற்றைப் பரவச் செய்யவே 'முல்லைக் கொடி' என்னுந் தாள் வெளிவருகின்றது.

மற்றொரு தனிக்கோட்பாடும் நமது இதழுக்கு இருக்கின்றது. அதாவது நாட்டுக்கு ஆக்கமான கருத்துக்களை வெளியிடும்போது கீழ்த்தரமான உணர்ச்சிகளை மக்களிடையே எழுப்பிப் பெருந்தன்மையற்ற நிலைகளைக் கையாண்டு மன்பதைக்குக் கேடு சூழாமல் மிக்க சான்றாண்மையுடன் வெளிவருகின்றது.

இத் தனிச் சிறப்பை நேயர்கள் அறிந்து இவ்விதழை நாட்டில் நன்கு படரச் செய்து நலம் பெருக்குவாராக!

எட்டாம் ஆண்டிலிருந்து 'முல்லைக் கொடி' புதிய எழுத்துக்களோடும் புதிய முறைகளோடும் புதிய ஆசிரியக் குழுவினர் பொறுப்போடும் அழகாகப் படர்ந்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நூல் நிலையத் திறப்பு

அரசாங்கம் பற்பல நன்மைகளை மக்கட்குச் செய்து வருகின்றது.

அறிவை இளைஞர்கள் பெறப் பல கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறிவைப் பொதுமக்களிடமும் விருத்தி செய்ய 14-6-55-ல் நூல் நிலையங்களைப் பல இடங்களில் அரசினர் தோற்றுவித்தனர். இம் முறையிலேயே நம் குருகுலப் பள்ளியிலும் ஒரு நூல் நிலையம் தோன்றியுள்ளது.

14-8-55 அன்று 5½ மணிக்குக் கிராம மணியம் திரு வேதாந்தாச்சாரியாரவர்கள் தலைமை தாங்கி நூல் நிலையத்தைத் திறந்து வைத்தனர். அவ்வமயம், கல்விமக்கட்குக்கண்போன்றது என்றும், இளமையிற் கல்வி கற்ற மக்கள் பிறகு தம் வேலையில் ஈடுபட்டு மறந்துவிடுகின்றனரென்றும் அவ்வாறு மறக்காது மேன்மேலும் பொதுஅறிவை விருத்தி செய்யவே நூல் நிலையம் திறக்கப்படுகிறதென்றும் நூல் நிலையத்தை எல்லாரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

பிறகு நூல்நிலையப் பொறுப்பாளர் கீழ் வருமாறு பேசினர். குருகுலம் எல்லார்க்கும் பயன்தரும் ஒரு சிறந்த ஒப்பற்ற நிலையம். இந் நிலையத்தை இங்குள்ள மக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கட்காகப் பற்பல நன்மைகள் கிடக்கின்றன. அவற்றினால் என்னபயன் என ஒதுக்குகின்றனர். பலர் இங்கு வந்து நூல் நிலையத்தில் கிடக்கும் புத்தகங்களைப் படித்தால் பொது அறிவு ஏற்படும். ஆனால் அதைப் படித்து என்ன ஆக வேண்டியிருக்கிறது என எண்ணுகின்றனர் பலர். இங்கே இருக்கும் புத்தகங்களனைத்தும் அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டவை. அவர்கள் எங்கிருந்து இப் புத்தகங்களைப் பெற்றனர் எனச் சிந்தித்துப் பார்க்க வேண்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

அடியார் குறை

(உ. மா. துரைசாமி.)

நம்முடைய வீட்டுக்கு நமது உறவினரும், நண்பர்களும், அன்னியரும் வெளியூரிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் வருகிறார்கள். இவர்களில் சிலபேர் ஏதோ ஒரு வேலையாக வருவதுண்டு. வேலையின் காரணமாக வாராமல் சிலபேர் நலனை விசாரிக்க வருவதும் உண்டு. யார் வந்தாலும் முகமலர்ச்சியோடு வரவேற்கிறோம். பிறகு, மற்ற உறவினர்கள் நண்பர்கள் முதலியவர்களின் நலனை விசாரிக்கிறோம். வந்தவர்களுக்கு உணவளித்து உபசரிப்போம். அன்னியராயிருந்தால் எந்த ஊரிலிருந்து வந்தீர்களென்றும், என்ன வேலையாய் வந்தீர்களென்றும் கேட்டுத் தெரிந்துகொண்டு அதற்கு ஆவன செய்வதுண்டு. அன்னியரானாலும் உணவளிப்பது தமிழ் நாட்டின் வழக்கம். இதைத்தான் வந்தவர்களை விசாரிப்பது என்று சொல்லுவது வழக்கம். வந்தவர்களைப் பாராமலும் பேசாமலும் ஒருவர் இருந்தால் வந்தவர்கள் என்ன எண்ணுவார்கள்? அவர்கள் திரும்பினாலும் திரும்பலாம் அல்லது உரிமையுடையவர்களாயிருந்தால், எந்தக் காரணத்தால் இப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டு விட்டுப் போவார்கள். இது மனக் குறைதானே! இவை எல்லாம் உலக வழக்கு. இதைப்போல ஒருவர் தனக்குத் தெரிந்தவரைப் பார்க்கப் போனார் நடந்தது இன்னதென்று பார்ப்போம்.

ஒரு அடியார் திருமுல்லைவாயிலுக்குப் போனார். அங்கே கோயில் கொண்டிருக்கும் மாசிலாமணி ஈசுவரர் தான் அவருக்குத் தெரிந்தவர். அவரைக் கண்டார். ஈசுவரன் அவரைப் பார்க்கவுமில்லை, பேசவுமில்லை. பேசவில்லையே. இந்த அடியார் திரும்ப வேண்டியவர்தானே? உரிமையுடையவராயிற்றே! தொன்று தொட்டு அன்புபூண்டவர் இவர். விடுவாரா? அடியார் கேட்க ஆரம்பித்தார்:—

"உன் கோயிலுக்கு வந்தால் உன் அருட் கண்ணால் பார்க்கவில்லை வா வென்று சொல்லவில்லை; நீயார், எங்கு வந்தாய், என்று வந்தாய், எது நினைந்து வந்தாய் என்னையடைந்தாய் என்று கேட்கவில்லை வாய் திறந்து பேசாமல் இருப்பது உனக்கு அழகா? முகமறியாதவர்போல் இருப்பது நியாயமா? தொன்று தொட்டு உனது பூங்கழற்கு அன்பு பூண்டவனல்லவா. உலகமறிந்தது இது இல்லை யென்று நீர் சொன்னாலும் நான் உம்மை விட மாட்டேன்; உம்முடைய அருளை நாடி வந்திருக்கிறேன்; நீர் சும்மா இருப்பது நியாயமில்லை என்கிறார். இதே அடியார் திருவொற்றியூருக்குப் போனார். தியாகப் பெருமானைத் தரிசித்தார். அவரும் வாய்திறந்தொரு வார்த்தையும் பேசவில்லை. அங்கும் இவ்வடியார் பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்து விட்டார். "இரப்பவர்க்கு ஒன்றும் கொடுக்கவில்லை தியாகர் என்ற பெயர் எதற்காக எடுத்தீர்? உமக்கு வீடு வெள்ளி மலை; வில் பொன்மலை; அதனால் நீர் பெரிய பணக்காரர் என்று கேட்டிருக்கிறேன். வாக்கசரும், சம்பந்தரும் களிக்கப் படிக்காசு அளித்தீர்; சுந்தரர்க்குக் கச்சூரில் சோறு இரந்தளித்த வண்மையைக் கேட்டிருக்கிறேன்; கல்லையும் பசும் பொன் எனப் புரிந்த கருணையைக் கேட்டிருக்கிறேன்; பொய்யிலார்க்கு முன் பொற்கிழி யளித்த புலவரோடு என்று புகழ்ந்திடக் கேட்டிருக்கிறேன். குற்றமெத்தனை யத்தனையெல்லாம் குணமெனக் கொள்ளும் குணக் கடல் என்றும் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட வள்ளலாகிய உம்மை நான் நம்பி உம்மிடம் வந்து ஏற்றால், உண்டு இல்லை என்று வாய் திறந்தொரு வார்த்தை சொல்ல வேண்டும்; பேசாமலிருக்கின்றீர்; அளிக்கும் தன்மையுடைய நீர் இங்கே இருக்க அடியேன் அலைவது அழகோ, ஒளிக்கும் தன்மைதான் உமக்கு உண்டோ? நின்னருட்கே நின்று நின்று வாடுகின்றேன்; நின் பொன்னருளை எண்ணி எண்ணி வாடுகின்றேன்; உன் சந்நிதிக் கண் வந்து வந்து வாடுகின்றேன். என் பாதவிப்பைப் பார்த்திலையே; கருணை சற்றுங் கொண்டிலையே; நீ கைவிடில் யாது செய்வேன் உம்முடைய திருவடியன்றி வேறு துணையும் நான் அறிந்திலேன். என் நெஞ்சில் அமர்ந்த நீர் என் குறையை நன்றாயறிவீர். அதனால் அருள் புரியவேண்டும் என்று வேண்டுகிறார் நம் வடலூர் அடிகள். (திருவருட்பா-இரண்டாவது திருமுறை)

அருள் புரிவதானால் காலத்திலேயே செய்யவேண்டும். தாமதம் செய்வதில் பயன் இல்லை என்கிறார்.

முன்மழை வேண்டும் பருவப்
பயிர்வெயின் மூடிக்கெட்ட
பின் மழை பெய்ந்தென்னை பேறுகண்
டாயந்தப் பெற்றியைப்போ
லின்மழை போற்கொடை யின்றன்றி
மூப்பு நெருங்கியக்கால் [மழை
பொன்மழை பெய்ந்தென்னை கன்
பெய்ந்தென்னை பூரணனே.

திருவருட்பா முதல் திருமுறை—
திருவருண் முறையீடு-98.

திருவாரூர்க் கல்வெட்டுக்கள்

புலவர் நாவிற் பொருந்தியுள்ள பெருமை சோழ நாட்டிற்குப் பழமையானது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்களாதலின், உண்டி தரும் சோழ நாட்டை வாழ்த்தாதவர்கள்யார்? சோழ நாடு வெற்றுணவால் மட்டுமல்ல; அறிவு நிலைக்களன்களான ஆலயங்களாலும் தனிச் சிறப்புடையது. தெய்வமணங் கமழச் சிவாலயப் பூங்கா அமைத்தவர்கள் சோழர்களே. "தென்னாடுடைய சிவன்" என்ற அருள் வாக்குச் சோழ நாட்டின் சிவாலயங்களின் பரப்பைக் கொண்டே எழுந்தது எனலாம்.

சோழர்கள் தம் அரண்மனைத் தெய்வமாக வைத்துப் போற்றி வந்த சிவாலயங்கள் இரண்டு. அவை திருவாரூரும், தஞ்சை இராஜராஜேச்சரமுமாம். அவற்றுள் திருவாரூரே மிகப்பழமையானது; சிறந்தது. சோழர்கள் தம் தலைநகரை மாற்றித் தஞ்சையில் அமைத்துக்கொள்ள விரும்பியபோது, இடம் மாற்றியும், இடத்திலுள்ள இறையன்பு மாற்ற முடியாமையால் புதிது கண்ட தஞ்சைத் தலைநகரில் திருவாரூர்த் தியாகப் பெருமான் போலவே ஒரு படிமஞ் செய்வித்து, திருவாரூரைப் போலவே எல்லாப் பணிகளும் இயற்றுவித்தார்கள் என்ற நிகழ்ச்சி திருவாரூரின் தொன்மையையும், அரசர்க்குள்ள அளவிறந்த அன்பையும் காட்டும் தக்க சான்றும்.

சோழ மன்னர்களுடைய நேர்ப் பார்வையில் காண்காணிக்கப் பெற்றுவந்த சிவதலங்கள் நான்கு அவை திருவாரூர், காஞ்சிபுரம், சிதம்பரம், திருவிடை மருதூர் என்பன.

அவற்றுள் திருவாரூர் மிகச் சிறந்தது. சோழ மன்னர் சிறந்த ராஜதானியாகக் கொண்டிருந்தமையாலும், தாங்கள் புதிது கண்ட தலைநகரங்களிலும் தியாகப் பெருமானையே வைத்து வழிபட்டார்கள் ஆதலாலும், பெரிய புராண அடியார்களிற் பெரும்பாலோர் வசித்த இடமாதலாலும், சுந்தரர் பெருமானையும் சேரமான் பெருமானையும் நோக்கி இறைவனே வழிப்படுத்தியனுப்புகின்ற சிறப்பாலும் சிறந்ததென்பது வெளிப்படை. முதல் இராஜராஜன் காலத்தில் திருவாரூரும், தஞ்சையுமே முதன்மைத் தானமாக இருந்தன.

இத்தலம், கயாமாணிக்கவளநாட்டைச் சார்ந்த திருவாமூர்க் கூற்றத்துத் திருவாரூர் என்றும் அதிராஜவளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் என்றும், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் என்றும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

இவற்றுள் முதற் கல்வெட்டு இரண்டாங் குலோத்துங்கன் காலத்தது (கி. பி. 1113-1150) இரண்டாவது விஜயராஜேந்திரனாகிய இராஜாதிராஜன் I (கி. பி 1018) காலத்தது. மூன்றுவது இன்னாரதென் றறியப்படாவிட்டாலும் 'கோனேரின்மை கண்டான்' என்று தொடங்குவதால் முதல் ராஜராஜனதாகலாம் (985-1014) என்று கல்வெட்டறிஞர்கள் கருதுகிறார்கள். ஆகவே முதல் இராஜராஜன் காலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாடாக இருந்தது. பின்னர் Iம் ராஜாதிராஜன் காலத்து அதிராஜராஜ வளநாடாக ஆயிற்று. அதற்குப் பின்பு IIம் குலோத்துங்கன் காலத்துக்கயாமாணிக்க வள நாடாகப் பெயர் சூட்டப்பெற்றது. இதனால் அரசர்கள் தத்தம் ஆட்சிக்காலத்தில் நாடுகளைப் பிரித்துக் கட்டித் தம் மாபிற்கும் அன்பிற்கும் ஏற்பப் பெயர் சூட்டினார்கள் என்பது அறியப்படும்.

II-ம் குலோத்துங்கன் திருவாரூரையே வள நாடாக்காது கயாக்கரையை வள நாடாக்கியதின் காரணம் சோழமன்னரின் அரண்மனை அங்கு இருந்தமை என்று ஊகிக்கலாம் அதற்குச் சான்றாக அரண்மனை வெளி என்ற இடமொன்று கயாக்கரை போகும் வழியிலுள்ளது என்பது அறியத் தக்கது.

ஊர்த்தெருக்களுக்கும் அடிமுடி தேடிய திருவீதி, திருவடிப் போது நாறிய திருவீதி, பொன் பரப்பிய திருவீதி, புகழாபரணர் திருவீதி எனவும், ராஜராஜன் திருவீதி, குலோத்துங்கன் திருவீதி எனவும் பெயர்கள் அமைக்கப்பட்டிருந்தன அவை இன்ன திருவீதி எனத் தெளிய அறியப்படாவாயினும் புகழாபரணர் திருவீதி என்பது இப்போது காரைக்காட்டுத் தெரு என வழங்கும் திருவீதி நான்கையும் அறிவிப்பதாகும்.

கோயில்:

II-ம் ராஜாதிராஜன் தம் ஆட்சியாண்டு 16-ல் பெரிய கோபுரத்தையும், சபாபதி மண்டபத்தையும் கட்டினான் புற்றிடங்கொண்ட பெருமான் கோயிலுக்குப் பூங்கோயிலெனவும், அதனெதிரில் தென்பக்கத்திலுள்ள அசலேசத்திற்கு அரனெறி எனவும் நாயக்கர் காலத்துக் கல்வெட்டுக்களில் அரனெறி அசலேசம் எனவும் பெயர்கள் வழங்கி வந்தன. ராஜநாராயண மண்டபம் என்பது வீரநாராயணன் கட்டியதாக இருக்கலாம். இதனால் ராஜநாராயணன் என்ற

பெயரோடு ஒரு அரசனில்லாததை அறியத் தக்கது.

பணிகள்:

ராஜராஜசோழனது பாட்டியாரும், மதுராந்தக உத்தம சோழனின் தாயாரும், கண்டராதித்த சோழன் மனைவியுமான உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார் அரனெறிக் கோயிலைக் கற்கோயிலாகக் கட்டுவித்தார். அதில் இரண்டு திருவுருவங்களை எழுந்தருளுவித்தார். சகம் 1362ல் கி. பி 1440ல் தக்ஷிண சமுத்திராதிபதியான லக்கம தண்ட நாயகவுடையாருக்கு நன்ருக அவர் மந்திரி கோபுரம் கட்டினான். இந்தக் கோபுரம் எது என்று அறியக் கூடவில்லை பரகேசரி II-ம்ராஜேந்திர சோழன் வீதி விடங்கப் பெருமான் கர்ப்பக் கிருகமும், வன்மீகவுடையார் மண்டபமும் பொன் வேய்ந்தான். இது வெள்ளாளக் கூத்தனுகிய செம்பியன் மூவேந்த வேளானைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது.

அணிகள்:

வீதிவிடங்கத் தேவர்க்கும், காமக் கோட்ட முடைய நாச்சியாருக்கும் மணிகளும் மாலைகளும் அளிக்கப் பெற்றன. பொற்பல்லக்குச் செய்ய, உத்தரவிடப்பட்டது. காதணியும் செய்து வழங்கப்பட்டது

திருப்பெயர்கள்:

கல்வெட்டுக்களில் வன்மீக நாதரின் பெயர் புற்றிடங் கொண்டார் என்றும், தியாகேசர் பெயர் வீதி விடங்கமுடையாரென்றும் குறிப்பிக்கப் பெறுகின்றன. பொற்படிக்க நாயக ஈச்சரமுடையாரென்று இறைவனின் திருநாமம் குறிப்பிக்கப்படுகிறது. பொற்படிக்க நாயகம் என்பது ஆடகேச்சரம் என்பதின் தமிழ் மொழியாக இருத்தல் வேண்டும். திருமண்டளியுடைய மாதேவரென்றும் சத்தியவாகேசர் என்றும் பரவையுண்மண்டளிப் பெருமான் வழங்கப்பெறுகின்றார். கமலாலயத்திற்குப் புதுநீர் வருவாயில் அமைந்திருக்கின்ற விநாயகர், திக்கு நிறைந்த விநாயகர் எனக் குறிப் பிடப்படுகிறார்.

மற்றும், விக்ரமசோழீச்சரமுடையார், ஆனந்தேசமுடைய நாயனார், உலகேசமுடையார் முதலிய பெயர்களும் வருகின்றன.

தியாகராஜர் என்ற திருநாமம் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறவில்லை. திருவாரூருடையார் வீதி விடங்க மாதேவர் என்றே வழங்கப்படுகிறார் அம்மை காமக் கோட்டமுடைய நாச்சியார் என்று குறிக்கப் பெறுகிறார். இந்த அம்மை நீலோத்பலாம்பிகையா, கமலாம்பிகையா என்று அறிந்துகொள்ளுதற்குரிய சான்று ஒன்றுமில்லை.

அரசர்கள்:

இக் கோயிலுக்குப் பணி செய்து—அணிசெய்து பரிபாலித்த அரசர் பெருமக்கள் பராந்தகன் I, ராஜராஜன் I, ராஜேந்திரன் I, ராஜாதிராஜன் I, குலோத்துங்கன் I, குலோத்துங்கன் II, விக்கிரம சோழன், ராஜாதிராஜன் II, குலோத்துங்கன் III ராஜராஜன் III, ராஜேந்திரன் III முதலிய சோழ அரசர்களும், மாறவர்மன், ஸ்ரீ வல்லபன், குலசேகரன் ஆகிய பாண்டிய அரசர்கள் இருவரும், வீரபூபதி நாயக்கர், லக்கமதண்ட நாயக்கர் ஆகிய நாயக்க மன்னர் இருவரும், பிற்காலத்திய மகாராஷ்டிர அரசர்களுமாவர்.

விழாக்கள்:

அநபாய குலோத்துங்கன் காலத்தில் வருஷத்துக்கு 56 விழாக்கள் நடைபெற்றன. கோனேரின்மை கொண்டானுகிய முதல் இராஜராஜனுல் தந்தை பிறந்த நாள், தான் பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதயத்திலும் ஆடித் திருவாதிரையிலும், விழாக்கள் கொண்டாடப் பட்டதாகத் தெரிகிறது.

நிர்வாகம்:

திருவாரூர்க் கோயிலை அரசன் தனது நேர்ப் பார்வையிலேயே வைத்திருந்தான். தேவகாரியம் சீர்பெற நடக்க அரசகாரியம் பார்ப்பாரும், திருமந்திர ஓலைநாயகமும், ஸ்ரீகாரியம் பார்ப்பாருமாகப் பலர்கூடிய குழுவினுலேயே நிர்வாகம் நடைபெற்று வந்தது நிர்வாகக் குழு நிகழ்ச்சிகள் தேவாசிரிய மண்டபத்திலேயே நடைபெற்று வந்தன.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்



பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ், 53 கிடங்குத் தெரு, சென்னை 1

உறக்கம்

உணவு கொண்டபின் உறக்கம் வருவது எதனால் என்பதைச் சிறிது உற்று நோக்குக. உணவை எலா முன் இயக்கம் இன்றி வறிதே யிருந்த தீனிப்பை, உணவை எற்ற பின் அதனைச் செரிக்கச் செய்வதில் மிக்க முயற்சியுடையதாய் இயங்குதலை அறிந்துகொள்ளலாம். நமதுடம்பின்கண் உள்ள எந்த உறுப்பு எதொரு தொழிலைச் செய்தாலும், அஃது அதனைச் செய்வதற்குச் செந்நீரானது (இரத்தம்) நரம்புகளின் வழியே ஓடிவந்து அதற்கு வலிவினைத் தந்து அதனை அதனாற் செய்து முடிக்கின்றது. தீனிப்பையானது உணவு இடப்படாத காலங்களில் ஓய்ந்திருத்தலின், அப்போது அதிற் செந்நீர் ஓட்டங் குறைவாகவே யிருக்கும். ஒருவன் விழித்திருக்குங்கால், அவனது மூளையானது ஓயாது இயங்கி, அவனுடம்பிலுள்ள எல்லா உறுப்புகளையும் இயக்கிய வண்ணமாய் இருத்தலால், அப்போது அவனுடம்பிலுள்ள செந்நீரானது அவனது மூளையிலேயே மிகுதியாய்ப் பாயும்; ஆனால், மற்றையுறுப்புக்களை மூளையானது இயங்கும்போதோ, அது தன்னகத்துள்ள செந்நீரில் ஒரு பெரும் பகுதியை அவ்வுறுப்புகளுக்கு ஓடச் செய்து உதவி புரிகின்றது. இவ்வாறாக நமதுடம்பினுள்ளே நிகழும் நிகழ்ச்சியை நினைந்து பார்க்கவே, உணவின்றி வெறிதாய் இருக்கும் வேளைகளிற் செந்நீர் ஓட்டங் குறைவாயுள்ள தீனிப்பையானது, தன்னகத்தே உணவுப் பொருள் வந்து சேர்ந்தவளவானே மிக்க சுருசுருப்புடையதாய் இயங்கா நிற்க, அப்போது அதன் இயக்கத்திற்கு உதவியாய் மூளையில் ஓடுஞ் செந்நீரில் ஒரு பெரும்பகுதி தீனிப்பையின் நரம்புகளில் ஓடிவந்து பரவுகின்றது. அவ்வாறு மூளையின் செந்நீர் அதனை விட்டுத் தீனிப்பைக்குச் செல்லுதலால், மூளை செந்நீர் குறைந்து உறக்கத்திற் செல்கின்றது. ஆகவே, உணவெடுத்தபின் உறக்கம் வருவது இயற்கை நிகழ்ச்சியாயிருத்தல் கண்டுகொள்க.

இனி, உடம்பு உயிரொடுகூடி நிலைபெறுதற்கும் உயிரின் நினைவுகளை வெளிமுகமாக்கி வளர்ப்பதற்கும், உணவானது அதற்கு இன்றியமையாததாய் இருக்கின்றது. அவ்வளவு சிறந்த உணவை ஏற்று அதனை நமதுடம்புக்குப் பலவகையிற் பயன்படுத்துந் தொழிலில் தீனிப்பை முனைந்து நிற்குங்கால், அதன் றொழிலுக்கு இடையூறு வாராதபடி மூளையானது தூக்கத்திற் செல்ல வகுத்த இறைவன் செயல் எத்துணை வியக்கற்பாலதாயிருக்கின்றது! இதுகொண்டு மூளையானது மிகுந்த சுருசுருப்புடையதாய் ஒன்றை அறிவதிலும் ஒன்றைச் செய்வதிலும் முனைந்து நிற்கும் நேரங்களில், தீனிப்பையானது முயற்சியின்றி ஓய்ந்திருக்க வேண்டுமென்பதும், மற்றுத் தீனிப்பை உடலோம்புதற்கு இன்றியமையாததான உணவினை ஏற்று அதனைச் செரிக்கச் செய்யுந் தொழிலில் ஈடுபட்டு நிற்குங்கால் மூளையானது அறிதல் எவுதல் முதலான தொழில்களைச் செய்யாமல் அமைந்திருக்க வேண்டுமென்பதும் எவர்க்கும் இனிது விளங்கா நிற்கும். தீனிப்பை மிகுதியாய் இயங்கும்போது மூளையிலுள்ள செந்நீரில் ஒரு பெரும்பகுதி அப்பையின் நரம்புகளிற் செல்லுதலால், அந்நேரத்தில் மூளைக்கு முயற்சியினைக் கொடுப்பவர்கள் தமது மூளையினைப் பழுதுபடுத்துவதுடன், தமது தீனிப்பையின் வலிவினையுங் குறைப்பவராவர். நீண்ட வாழ்க்கையினைத் தருதற்குக் கருவியான மூளையுந் தீனிப்பையும் பழுதுறுமானாற், பலவகைக் கொடுநோய்கள் கிளைத்து அவரை யுயிர்மாளச் செய்யும். ஆகவே, உணவருந்தும் வேளையிலுணவுப் பண்டங்களை நன்றாய்ச் சுவைத்து அவைகளை மெல்ல விழுங்குதல் வேண்டுமே யல்லாமல், அந்நேரத்தில் வேறொன்றனை நினைதலும் பிறரொடு பேசுதலும் ஆகா. அங்ஙனமே, உணவருந்தியபின் வரும் உறக்கத்தையுஞ் சிறிதுந் தடைசெய்யாமற், பகற்காலமாயிருந்தால் அரைமணி நேரத்திற்குக் குறையாமலும், இராக்காலமாயிருந்தால் மூன்றுமணி நேரத்திற்குக் குறையாமலும் நன்றாய் அயர்ந்துறங்குதல் வேண்டும்.

எனென்றால், ஓர் இரவு உறக்கங் குறைந்தால் ஒருவனுக்கு அவனுடம்பிலுள்ள சதையிற் சிறிதேறத்தாழப் பதினாறு பலம் எடையுள்ளது குறைந்து போதலை இஞ்ஞான்றை அமெரிக்க ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். இன்னுந், தூக்கக் குறைவினால் உடம்பின் சதையேயன்றி, அறிவின் உரமுங் குறைந்துபோகின்றது. இதனையும் அமெரிக்க அறிஞர்கள் ஆராய்ந்து கண்டிருக்கின்றனர். ஒரு கல்லூரியிற் பயிலும் மாணவரில் இருகுழுவினர் இவ்வாராய்ச்சிக்கென்று பிரித்தெடுக்கப்பட்டனர். அவருள் ஒரு குழுவினர் வெள்ளிக் கிழமை இரவு முழுமையும் ஒருவகைச் சீட்டாட்டம் ஆடும்படி எவப்பட்டனர்; மற்றொரு குழுவினர் வழக்கம்போல் அன்றிரவு முழுதும் அயர்ந்துறங்கும்படி விடப்பட்டனர். அடுத்தநாட் சனிக்கிழமை காலையில் அவ்விருவகை மாணவரும் ஆசிரியரின் எதிரே வருவிக்கப்பட்டு, எழுநூற்று நாற்பத்தொன்பதை அறுநூற்று முப்பத்தெட்டால் நினைவினாலேயே பெருக்கித் தொகை காணும்படி அவராற் கற்பிக்கப்பட்டனர். வெள்ளிக்கிழமை யிரவு முழுதும் நன்றாய்த் தூங்கியெழுந்த மாணவர்கள் அக் கணக்கினை விரைவாகவும் பிசகு படாமலுந் தமதுள்ளத்திலேயே எளிதிற் பெருக்கித் தொகை கண்டனர். மற்று, அவ்விரவு முழுதும் விழித்திருந்து சீட்டாடிய இளைஞர்களோ அக் கணக்கினை விரைந்து செய்யமாட்டாதவரானதுடன், அதனைப் பிழைபாடாகவுஞ் செய்து முடித்தனர். அதுவேயுமன்றித், தூக்கங் கெட்ட பிள்ளைகளிற் சிலர் தாம் எண்களை நினைவு கூரக் கூடவில்லையென்றனர்; மற்றுஞ் சிலர் தம் நினைவு ஒருவழிப்படாமல் அலையலாயிற்றென்றனர்; வெளிச்சங் கண்ணிற் படக் கூடவில்லை யென்றனர் வேறு சிலர்; மண்டை கலங்கிவிட்டதென்றனர் பின்னுஞ்சிலர்; யான் எதனையும் நன்கறியக்கூடவில்லையென்றனன் ஒரு சிறுவன்; மற்றும் ஒரு சிறுவன் எனது பிடதலை யான் ஒரு கற்பாறைமேற்

கிடந்து உறங்கி எழுந்தாலெனத் தோன்றியது என்றனன். இவ்வாராய்ச்சி கொண்டு, ஓர் இராப்பொழுது முழுமையுங் கண்விழித்திருத்தல் உடம்புக்கும் உயிருக்கும் எத்துணைப் பொல்லாங்கினைத் தருவதென்பது நன்கு புலனாகின்றதன்றோ?

இனி, ஓர் இரவில் எட்டுமணி நேரந் தூங்குவார்க்கும், அதில் இரண்டு மணிநேரங் குறைய ஆறுமணிநேரந் தூங்குவார்க்கும் உள்ள உடல்நல மன நல வேற்றுமையினையும் மேற்குறித்த ஆசிரியர்களே ஆராய்ந்து காட்டியிருக்கின்றனர். முயற்சி அவிந்திருக்கும் வேளைகளிற் கழியும் உடற்சூட்டை விட முயற்சி மிகுந்திருக்கும் வேளைகளிற் கழியும் உடற்சூடு மிகுதியாயிருக்கின்றது. எட்டு மணிநேரந் தூங்கி யெழுந்த மாணவர்கள் பதினைந்து நிமிடம் முருகிய அறிவு முயற்சி செய்ததில் நூற்றுக்குப் பத்துவிழுக்காடான ஆற்றலே அவர்கள் உடம்பினின்றுங் கழிந்தது. ஆனால், ஆறுமணிநேரந் துயின்றெழுந்த பிள்ளைகள் அத்தகைய அறிவுமுயற்சி செய்ததிலோ, உடம்பின் ஆற்றல் நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காடு அவர்கள் இழந்து போனமை விளங்கலாயிற்று. இவ்வாராய்ச்சியினால், மூளையுழைப்புள்ளவர்களுக்குத் தூக்கங் குறையக் குறைய, அவர்களுடைய உடம்பின் வலிவுங் குறைந்து போதல் நன்கு புலனாகின்றதன்றோ?

இன்னும், ஒரு மகளிர் கல்லூரித் தலைவியார், தம் மாணவிகள் கல்விப் பயிற்சியில் வேண்டுமளவு திறம்பெறாதிருத்தல் கண்டு, அவர்கள் ஒவ்வொரு நாளும் பிற்பகலில் ஒருமணி முதல் இரண்டுமணிவரையில் நன்றாய் உறங்கி எழுமாறு கட்டளையிட்டனர். அவ்வாறே அப் பெண்பிள்ளைகள் செய்து வந்த சிலநாட்களிலெல்லாம், அவர்கள் கல்வியில் திறமுந் தேர்ச்சியும் பெற்றமை தெளியப்பட்டது.

இங்ஙனமே, அமெரிக்க ஆசிரியர்கள் கல்வி பயிலுந் தம் மாணவர்கள்பாற் செய்து பார்த்த ஆராய்ச்சிகள் அத்தனையும், இரவிலும் பிற்பகலிலும் வேண்டுமளவு அயர்ந்துறங்கியெழும் மாணவரின் மூளை தெளிவுஞ் சுருசுருப்பும் வாய்ந்து மறதியில்லாமற் பாடங்களை எளிதிற் பயின்று அவர்கள் கல்வியறிவிற்றேர்ச்சிபெற்று விளங்கத் துணைபுரிதலும், அங்ஙனம் உறங்கி அயர்வு தீர்த்துக் கொள்ளாத இளைஞரின் மூளை தெளிவின்றி மங்கிச் சோம்பலுற்றுக் கற்ற பாடங்களையும் மறந்து, அவர்கள் கல்வியில் வல்லவராகவொட்டாமற் றடைசெய்தலும் இனிது விளங்கலாயினவென்க.

எனவே, உறக்கமானது மூளையுழைப்புள்ளவர்கட்கு வேண்டும் அளவிலுங் காலத்தினுஞ் சிறிதுங் குறையவிடாமற் பார்த்து நடப்பவர்கட்கே வாழ்நாள் நீளும் என்பதும் அதிற் கருத்தில்லாமையால் துயின்று அயர்வு தீர்த்துக்கொள்ள வேண்டும் இராக்காலங்களிலும் பிற்பகற்பொழுதிலும் வேறுபல முயற்சிகளைச் செய்வார்க்கோ வாழ்நாள் தேய்ந்துபோமென்பதும் நன்கு பெறப்படுதல் காண்க.

மக்கள் அல்லாத விலங்குகள், தம்மிற் பகையான விலங்குகட்கு அஞ்சி, இரவிலும் பகலிலும் நன்கு அயர்ந்துறங்காமல், அரைத் தூக்கத்திற் காலங்கழித்தலாலன்றோ, அவைகளிற் பெரும்பாலான நீண்ட வாழ்நாள் இல்லாதனவாய்ச் சில்லாண்டுகளில் மாண்டுபோகின்றன. தீனி குறைந்தவிடத்துஞ் சிலநாள் உயிரோடிருக்கும் விலங்குகள் தூக்கங் குறைந்தவிடத்து விரைந்து உயிர்மாளுதலும் ஆராய்ந்து காணப்பட்டது. இரைதராமல் வைக்கப்பட்டவழி ஒரு திங்கள் உயிரோடிருந்த பத்து நாய்க்குட்டிகள், ஒரு கிழமை உறங்காமல் வைக்கப்பட்டபோது ஒருகிழமைக்குள் ஒன்றன்பின் ஒன்றாய் இறந்துபோயின. அவற்றுள் ஒன்று தொண்ணூற்றிரண்டுமணி நேரந் தூங்காமல் வைக்கப்பட்டவுடன் உயிர்விடலாயிற்று.

உடம்புழைப்பு ஒன்றேயுடைய விலங்குகளே தூக்கக் குறைவினால் இங்ஙனம் வாழ்நாள் அஃகி மாண்டுபோகின்றன வென்றால், உடம்புழைப்பொடு மூளையுழைப்பும் ஒருங்கு வாய்ந்த மக்கள் துயில் குறைத்தால் நீடுவாழ்தல் இயலுமோ? ஆதலால், மனமுயற்சி யுடல் முயற்சி யிரண்டும் உடைய மக்கள் தமது துயிலின் அளவையுங் காலத்தையுங் குறையாமற் பார்த்துத், தமது வாழ்நாளை நீளச் செய்வார்களாக!

மேலே, உணவெடுத்த பின் தூக்கம் இயற்கையாய் வருதற்குக் காரணம் மூளையிலுள்ள செந்நீரிற் பெரும்பகுதி தீனிப்பைக்குச் செல்லுதலேயாம் என்பதனை விளக்கிக் காட்டினோம். இனி, இதனின் வேறான பிறிதொரு காரணத்தாலுந் தூக்கம் வருதலைச் சிறிது விளக்கிப் பேசுவாம்.

ஒருவன் ஓர் உடல் முயற்சியைச் செய்யுங்கால், அதனை அவன் செய்து முடித்தற்குக் கருவியாயிருப்பன அவனுடம்பிலுள்ள நரம்புக்கட்டுகளே (**Muscles**) யாம். எத்தகைய தொழிலைச் செய்வதாயிருந்தாலும் நரம்புக் கட்டுகளின் உதவியின்றி அதனைச் செய்தல் இயலாது; இத்துணை இன்றியமையாத நரம்புக்கட்டுகளின் இயக்கத்திற்குஞ் செந்நீர் ஓட்டங் கட்டாயமாய் வேண்டப்படுகின்றது. இந்நரம்புக் கட்டுகள் இயங்கும் போதெல்லாம் அக்காரத்தையே (சருக்கரையினையே) தமக்கு உணவாகக் கொண்டு அதனை எரித்துவிடுகின்றன.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD.

COIMBATORE.

"சுதந்திரம்-என்காதலி"

(நடேச—நாராயணன்)

"இந்தியா" பேசுகிறது

என்னுயிராம் சுதந்திரத்தை எங்கிருந்தோ
ஈண்டெழுந்த "ஆங்கிலவர்" அடிமை கொண்டு
மன்னுலகில் எனைப்பிரித்து உள்ளம் நோக
மடமடவென் றேஇழுத்துச் சென்று விட்டார்.
இன்னமுதம் எனைவிட்டு நீங்கும் போது
"என்றேனும் ஓர்நாள்நாம் ஒன்று சேர்வோம்
அன்னாளே நம்மின்பத் திருநாள் அத்தான்
அதுவரையில் தளராத முயற்சி செய்வீர்"

எனக்கூறி எனைப்பார்த்து ஏங்கிப் பின்பு
எழில்வீணைத் தங்கிஅவள் ஏகி விட்டாள்.
மனத்தெளிவு எனக்கேது? உள்ளம் நொந்தேன்;
மன்றாடிச் சுதந்திரத்தைப் பெறலா மென்றால்
எனதுற்றார் எவரையுமே அங்குக் காணா
நிலைசெய்து இழிவான செயலைச் செய்தார்
இனமெல்லாம் எங்கேஎங் கேயென் றெண்ணி
இரவுபக லாய்த்தேடித் தேடி நின்றேன்.

அமுதத்தைப் பிரிந்திருக்க நானென் ருசியை
அறியாத தன்மையனோ? சொல்வீர்; பின்னர்ச்
சமுதாய மக்களினை யொன்று சேர்த்துச்
சலியாது பெரும்புரட்சி செய்ய எண்ணி
இமைமூடா துழைத்துழைத்து வீரர் கவிஞர்
எண்ணில்லா அளவிற்குத் தோன்றச் செய்து
அமைவான புரட்சியினைப் பலகால் ஆற்றி
அன்னவளைப் பெறவேண்டி முயன்று நின்றேன்.

பல்லாண்டுக் கப்பாலே அன்றோர் நாளில்
பதினைந்து எட்டடுத்து நாற்பத்தேழாம்
நல்லான தேதியிலே 'சுதந்த்ர நங்கை"
நகைபூத்துத் திருவிழாவாய் வந்து சேர்ந்தாள்
சொல்லுதற்கு அவ்வின்பம் நம்செந் தமிழில்
சொல்லில்லை என்றால்மற் றெம்மொழியினில்
சொல்லிருக்கும்! இன்றடிமை நீங்கி வாழ்வில்
துவங்குகின்றோம் ஒன்பதெனும் ஆண்டை நன்றே.

(முதல் பக்கத் தொடர்ச்சி;

இந்த அடிப்படை கொண்டு ஆசிரியர் திருவள்ளுவர், 'நன்மைப் பயன்களுக்கு நல்லொழுக்கம் வித்து, தீமைப் பயன்களுக்குத் தீயொழுக்கம் வித்து; அதனால், நல்லொழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள்' என்று உலகுக்கு அறிவுறுத்துகின்றார்.

இதனால் ஒழுக்கமில்லாதவர் செய்யும் அறங்கள் போலியாய் முடியும் என்றும் அறிவுறுத்தியபடியாம். வித்தாந் தன்மையிலும் விளைவாம் தன்மையிலும், என்றும் இம் முறையே என்பதற்கு, 'என்றும்' என்றார்.

ஆசிரியர் செய்வித்த இத் தெளிவுக்கு யாது கைம்மாறு?

சுதந்திர விழா.

சுதந்திர விழா குருகுலப் பள்ளியில் 15-8-55 அன்று நடந்தது. கொடி வணக்கம் நடை பெற்றபின் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த தலைமையாசிரியர் சுதந்திரம் கிடைத்து எட்டாண்டுகள் முடிந்து இன்று ஒன்பதாம் ஆண்டு துவங்குகிறது என்றும், இந்திய நாட்டை அடிமைத் தளையினின்றும் அகற்றிச் சுதந்திரம் வாங்கித் தந்தவர் நம் மறைந்த மகான் காந்தியடிகளென்றும், அவரே இந்தியர்களுக்கும் அதுமட்டுமல்ல உலக மக்களுக்குங்கூட வழிகாட்டியென்றும்; பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு இன்றைய தேசியநட்பு உணர்ச்சிக்கும் உலக சமாதானத்திற்கும் காரண மென்றும், பொது மக்களாகிய நம் கடமை அவர்கள் காட்டும் வழியிலே நாம் நிற்ற லென்றும் கூறினார். பின் தொடர்ந்து ஆசிரியர் N. சுப்பிரமணியன் அவர்களும் பேசினார். கிராம மக்கள் பலர் கலந்து கொண்டனர். இனிப்புகள் மாணவர்கட்கும், பொது மக்கட்கும் வழங்கப் பட்டன.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். நாம் தருகின்ற விற்பனை வரி நிலவரி போன்றவைகளின் வாயிலாகவே இவைகளை வாங்குகின்றனர். நம் உழைப்பால் கிடைத்த பணத்தைக் கொண்டு நாமும் பயனடைதல் வேண்டாமா? எனவே படிக்காதிருப்பின் பொது அறிவு ஏற்படாதிருப்பது ஒரு புறமிருக்கப் பணத்தையும் இழக்கின்றோம். பொது அறிவுஇன்றி இக்காலத்திலே வாழ்க்கை நடத்துவது சிரமமாகையால் பொது அறிவை விருத்திசெய்ய இந்நூல் நிலயத்தில் வந்து படித்துச் சிறந்த பயனையடையுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று கூறி முடித்தனர்.

நன்றிகூறியபின் கூட்டம் தேசிய கீதத்துடன் இனிது முடிவுற்றது.

பொது மக்கள் நூல் நிலயத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

—[○]—

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)